# மாபெரும் தமிழ்க்கனவு மெய்ப்பட - தமிழினம் தழைத்தோங்க துணை நிற்போம்!



ஒரு மாபெரும் தமிழ்க் கனவுடன் இந்த மாநிலத்தின் முதலமைச்சர் பொறுப்பேற்றுள்ள முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், அந்தக் கனவுகள் மெய்ப்பட தனது திராவிட மாடல் ஆட்சியில் ஆற்றி வரும் பணிகளை எண்ணிப் பார்க்கும்போது மெய்சிலிர்க்கிறது!

**'எல்லார்க்கும், எல்லாம்'** - என்ற அவரது அந்த ஒற்றை வரி, **'கடுகைத் துளைத்து ஏழு கடலை புகுத்திய குறள்'** - என்பார்களே; அதைப் போல **அணுவைத் துளைத்து அகண்ட பூமியை உள்ளடக்கியது போன்ற பொருளடங்கியது** அல்லவா?

அந்த ஒற்றை வரி அவர் செல்லும் திராவிடப் பாதையை தெளிவாக்குகிறது; தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் போட்டுத் தந்த பாதையில் தான் மட்டுமல்ல; தி.மு.க. எனும் பேரியக்கத்தையும் நடைபோட வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதைக் கண்கூடாகக் காட்டிக் கொண்டிருக்கிறது.

நாட்டுக்கும் - நாட்டு மக்களுக்கும் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட தலைவர்களின் வரலாற்றைப் படிக்கும்போது, அவர்கள் ஒவ்வொருவரும் சில கனவுகளோடுதான் களம் இறங்கியுள்ளனர்!

**'மனிதத் தன்மையுள்ள மனித சமுதாயத்தை'** - உருவாக்குவதையே தனது கனவாக தந்தை பெரியார் கொண்டிருந்தார்!

ஒருமுறை இன்றைய கழகப் பொதுச் செயலாளர் அருமை நண்பர் துரைமுருகன் அவர்களும் நானும் அண்ணாவைச் சந்திக்க சென்றிருந்தோம்! **முதலமைச்சர் அண்ணா அவர்கள், ஜப்பான் போன்ற நாடுகளுக்கெல்லாம் சென்று திரும்பியிருந்த நேரம் அது! அண்ணா அவர்கள் அப்போது, தான் சென்றிருந்த நாடுகளின் வளர்ச்சி பற்றி எல்லாம் கூறிவிட்டு, போதுமான நிதி ஆதாரம் மட்டுமிருந்தால் தன்னால் தமிழ் நாட்டை 'இந்தியாவின் சொர்க்கமாகவே' ஆக்கிட இயலும்; அந்த அளவு திட்டங்கள் இருப்பதாகக் கூறினார்!** தமிழ்நாட்டை எப்படி எல்லாம் மாற்ற வேண்டும் என்ற கனவோடு அண்ணா வாழ்ந்து தன் கனவுகளை மெய்ப்பட வைக்க முடியாமல் அவர் மறைந்தாலும், அவரது கனவுகளை; ஆசான் பெரியாரது எண்ணங்களை நிறைவேற்றியேத் தீருவது என்ற துடிப்போடு செயல்பட்டார் தமிழினத் தலைவர் கலைஞர்!

முத்தமிழறிஞர் கலைஞர் தனது ஆட்சியின் சாதனைகளால் தமிழ்நாட்டையே புரட்டிப் போட்டார்! பெரியார் - அண்ணா கண்ட கனவுகள் மெய்ப்பட உழைத்தார்! ஆம், தெற்கே உதித்த அந்தச் சூரியன் ஒட்டுமொத்த இந்தியாவையும் வியக்க வைக்கும் ஒளி பாய்ச்சியது! தேய்ந்து கிடந்த தெற்கில், தாழ்ந்து கிடந்த தமிழகத்தினை எழுந்து நிற்கச் செய்து, நமது தலைமுறைகளைத் தலைநிமிர வைத்தார் கலைஞர்!

**"தமிழர்களே; தமிழர்களே! நீங்கள் என்னைக் கடலில் தூக்கி போட்டாலும் கட்டுமரமாக மிதப்பேன்! அதிலே நீங்கள் ஏறி பயணம் செய்யலாம்; கவிழ்ந்து விட மாட்டேன்"** - என கலைஞர் உதிர்த்த வாசகங்கள் அவரது உள்ளார்ந்த உணர்வுகளின் வெளிப்பாடு என்பதை உணராது அதனை விமர்சித்த கூட்டம் கூட உண்டு! தமிழ் உணர்வு. தமிழர் வாழ்வு இவற்றோடு தன்னை ஒன்றாகப் பிணைத்துக் கொண்டு, வாழ்ந்து அதற்காக ஓய்வின்றி உழைத்த அந்தப் பெருமகனின் கனவுகள் முற்றுப் பெற முடியாத அளவு இடை இடையே அவரது ஆட்சிக்குத் தொய்வுகள்!

பளிச்சிட்டதெல்லாம், வைரமென்று நம்பி, உப்புக் கற்களையும், கண்ணாடி துண்டுகளையும் உப்பரிகையில் ஏற்றி உண்மையாக உழைத்தவர்களை உதாசீனப்படுத்தியதால், எண்ணியதை முழுவதும் எட்ட முடியாத நிலை! அந்த நேரத்தில் தான் மாபெரும் தமிழ்க் கனவோடு, தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் களமிறங்கியிருக்கிறார்!



முரசொலி செல்வம்

அவருக்கென்று தனிக் கனவு எதுவுமில்லை; தந்தை பெரியாரின் கனவு, பேரறிஞர் அண்ணாவின் கனவு, தமிழினத் தலைவர் கலைஞரால் நிறைவேற்ற இயலாது விடுபட்ட கனவுகள் இவைகளை நிறைவேற்றிட வேண்டுமென்பதே அவரது தணியாத கனவு; அந்தத் திசை நோக்கி, அவர் நடத்தும் படைக்குத்தான் எத்தனை எத்தனை தடைக் கற்கள்!

தமிழ்நாட்டை ஆண்ட எந்த முதலமைச்சரும் சந்திக்காத அளவு அவருக்கு சோதனைகள்!

**•எதற்கும் ஒத்துழைப்பு தர மறுக்கும் ஒன்றிய அரசு**

**• அரசு எடுக்கும் முடிவுகளுக்கு அங்கீகாரம் அளிக்க மறுக்கும் ஆளுநர்**

**• அமைச்சர்களின் செயல்பாடுகளை தடுத்திட ஒன்றிய அரசின் ஏஜன்சிகளான அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, சி.பி.ஐ. போன்றவைகளின் தொடர் தொல்லைகள்!**

**•இயற்கையின் அடுத்தடுத்த தொடர் சீற்றங்கள்**

**•கொடுந்தொற்றுகளின் கோரத் தாண்டவம்**

-இவற்றை எல்லாம் எதிர்கொண்டு, அதாவது சில திரைப்படங்களில் சுற்றி சூழ்ந்து நின்று வியூகம் அமைத்து தாக்கும் எதிரிகளின் வியூகங்களை உடைத்து, வீறுகொண்டு எழுந்து இளம் சிங்கம் போல நிற்கும் கதாநாயகனைப் போல இன்று நமது தளபதி ஸ்டாலின், நிற்கிறார்!

**அவரது தமிழ்க்கனவு சுயநலக் கனவு அல்ல; சுயமரியாதை இயக்கத்தின் கனவு! அவரது தமிழ்க் கனவு தந்நலக் கனவல்ல; தமிழினத்தின் தன்மானத்தைக் காத்திடும் கனவு. அவரது தமிழ்க் கனவு,**

**'நாமார்க்கும் குடியல்லோம்;**
**நமனை அஞ்சோம்'.**

-என்ற உணர்வின் வெளிப்பாட்டோடு செயல்படுத்தப்படும் கனவு!

**தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் கனவு மெய்ப்பட, தமிழினம் தழைத்தோங்க, எல்லார்க்கும் எல்லாம் எனும் அவரது திராவிட மாடல் ஆட்சி தொடர, அவருடைய கரத்தைப் பலப்படுத்துவோம்!**

**தன்னலமற்ற அவரது தலைதாழாப் பணிக்கு என்றும் துணைநிற்போம்!**

# நனவாகும் கனவும், நம்பிக்கை தரும் குரலும்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் "மாபெரும் தமிழ்க் கனவு" பற்றி நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. சமூக நீதி, கடைக்கோடித் தமிழர் நலன், உலகை வெல்லும் இளைய தமிழகம், அறிவுசார் பொருளாதாரம், மகளிர் நலன் காக்கும் சமத்துவப் பாதை, பசுமைவழிப் பயணம், தாய்த் தமிழும் தமிழர் பண்பாடும் - என ஏழு நோக்கங்களை வண்ணங்களாகக் கொண்டு, முதல்வரின் வானவில் எண்ணங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஏழு நோக்கங்களும், எந்த முனையிலும் எள்ளளவு விடுபடுதலுமின்றி, அனைத்துத் தமிழ் மக்களையும் ஆரத் தழுவி நிற்பதால், 'மாபெரும் தமிழ்க் கனவு ', 'திராவிட மாடல்' எனும் விதையில் விளைந்து, திக்கெட்டும் கிளை விரித்துப் பரவி நிற்கும் விருட்சம் ஆகும்.

ஒவ்வொருவருக்கும் ஒரு கனவு இருக்கும்; எல்லோரையும் கனவு காணுங்கள்! - என்று அன்பழைப்பு விடுத்தார் அமரர் டாக்டர் அப்துல் கலாம். பலருக்கு இரவு நேரக் கனவு; சிலருக்குப் பகல் வேளைக் கனவு. அயர்ந்த தூக்கத்தில் காணும் கனவு, தூங்கி எழுந்ததும் தொலைந்து விடும். பகல் வேளைக் கனவு, பெரும்பாலும் பட்டுப் போய்விடும்.

காயம் இல்லாமல் கனவுகள் மட்டும் காணலாம்; ஆனால் வலி இல்லாமல் வாகான வெற்றி காண முடியாது. நிறைய காயங்களுக்குப் பிறகுதான், காயங்களினால் ஏற்படும் வலிகளை அனுபவித்த பின்னர்தான், கனவுகள் நனவாகும். "கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது அல்ல; உன்னைத் தூங்க விடாமல் செய்வது எதுவோ, அதுவே இலட்சியக் கனவு" என்றும் சொன்னவர் அப்துல் கலாம் அவர்கள்தான் !

வெற்றிக்காக உழைக்க வேண்டும். கொண்ட நோக்கத்தில் குறையாத நம்பிக்கை வேண்டும். அந்த நம்பிக்கை இருந்தால், நம்முள்ளே முயற்சி விடா முயற்சி முளை விடும். முளைவிட்ட முயற்சி - தளர்ந்து சாய்ந்து விடாமல், வளர்ந்தோங்குவதற்கு ஓயாமல் உழைக்க வேண்டும்.

**இலட்சியக் கனவுடன், "உழைப்பு, உழைப்பு, உழைப்பு" என உழைப்பின் உருவகமாகி, நாளும் நம்பிக்கைச் சுடரை இதயத்திலே வளர்த்து ஏந்திக் கொண்டு, முயற்சி முயற்சி என முயற்சியையே பாதையாகவும், மாறாப் பயணமாகவும் செய்த நம் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அடைந்திருக்கும் வெற்றியின் உள்ளீடு இதுதான் !**

இலட்சியங்களை வென்றெடுத்தவர்கள் எல்லாம் தொடர்ந்து கனவு கண்டவர்களாக இருந்தார்கள் என்பதையும்; "எதிர்காலம் என்பது, கனவின் அற்புத அழகில் நம்பிக்கை கொண்டவர்களையே சாரும்" என்பதையும் உணர்ந்து, தாம் தமிழ் மக்களுக்காகக் காணும் கனவு நனவாகும் என்பதை அறிந்து நடப்பதால், மு.க.ஸ்டாலின் காலத்தை வென்று வருகிறார்.

அதனால் அவருடைய மாபெரும் தமிழ்க்கனவு, மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக நனவாகி வருகிறது; எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில், நாட்டு மக்கள் அனைவரும் பாகுபாடின்றி நலம்பல பெற்று வருகிறார்கள்.

நாடுகளின் தலைவர்கள் - தலைமை ஆளுமைகள்- புரட்சிப் போராளிகள் - மாற்றங்களை நோக்கி மக்களை இட்டுச் சென்றவர்கள் - ஓங்கி எழுப்பிய உரிமைக் குரல்கள், உலகச் சரித்திரத்தின் ஒவ்வொரு ஏட்டிலும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

நவீன சோஷலிசத்தின் தந்தை - பொதுவுடைமைச் சித்தாந்தத்தின் பிதா மகன் என்றெல்லாம் போற்றப்படும் காரல்மார்க்ஸ், உழைக்கும் மக்கள் இழப்பதற்கு ஏதுமில்லை, அவர்களைப் பிணைத்திருக்கும் சங்கிலியைத் தவிர; அவர்கள் வென்றெடுப்பதற்கென்றே ஓர் உலகம் இருக்கிறது என எழுச்சி உரைத்து, "உலகத்தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!" என்று அவர்தம் உரிமை வாழ்வுக்குக் குரல் கொடுத்தார்; அந்தக் குரல் குவலயம் முழுவதும் எதிரொலித்தது!

ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனர், 1917 போல்ஷ்விக் புரட்சியின் முன்னோடிச் செயல்வீரர், சோவியத் அரசின் முதல் தலைவர் லெனின், "நீ கவலைகளைச் சுமந்து கண்ணீர் சிந்துவதை விட , லட்சியங்களைச் சுமந்து ரத்தம் சிந்து, உலகம் உன்னைப் போற்றும்" என்றழைத்தார். "உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்று நிலஉரிமைக் குரல் கொடுத்தார்.

லெனினியக் கோட்பாடுகளில் நின்று மனித குலத்திற்கு ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கி வைத்தவர்; இரண்டாம் உலகப் போரில், இங்கிலாந்தும் - அமெரிக்காவும் அஞ்சி நடுங்கிய பாசிஸ ஹிட்லரை வீழ்த்தியவர் ; பாட்டாளி வர்க்கத்தின் பாதுகாவலர் ஜோஸப் ஸ்டாலின், "பட்டுக் கையுறைகளுடன் உங்களால் புரட்சி செய்ய முடியாது" என்று புரட்சிக்குரல் கொடுத்தார்.

சீனாவை செஞ்சீனமாக மாற்றியவர்; "நம்முடைய பகைவர், எதையெல்லாம் எதிர்க்கின்றனரோ, நாம் அவற்றைப் போற்ற வேண்டும்; அவர்கள் ஆதரிப்பவற்றை நாம் எதிர்க்க வேண்டும்" என்று அறைகூவியவர்; "ஆயிரம் பூக்கள் மலரட்டும்" என்று கலை - அறிவியல் வளர்ச்சிக்கு வரவேற்பு கூறியவர் மாவோ என்ற மாபெரும் தலைவர்! "மார்க்சிஸம் நிச்சயம் தடைப்படாமல் வளர வேண்டும்" என்று மார்க்ஸியக் குரல் கொடுத்தார்.



முனைவர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். ( ஓய்வு )

அடிமை முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அதை ஒழிக்க முனைந்தவர்; "வழியில் கண்டெடுத்த அய்ந்து ரூபாயைவிட, உழைப்பினால் பெற்ற ஒரு ரூபாயின் மதிப்பு அதிகம்" என்று உழைப்பின் மேன்மையை உணர்த்தியவர்; அமெரிக்காவின் பதினாறாவது குடியரசுத் தலைவர் ஆப்ரகாம் லிங்கன், "மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்களுடைய அரசு, பூமியில் அழிந்துவிடக் கூடாது" என்று ஜனநாயகம் காக்கும் குரல் கொடுத்தார்.

இனவெறிக் கெதிராகப் போராடி 27 ஆண்டு சிறை ஏகியவர்; தென்ஆப்பிரிக்காவின் முதல் குடியரசுத் தலைவர், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர், நெல்சன் மண்டேலா. "வாழ்க்கை முழுவதும் அடிமைப்பட்டுக் கிடப்பதைவிட, சுதந்திரத்திற்குப் போராடி உயிர் துறப்பதே மேல்" என்று விடுதலை உரிமைக்குக் குரல் கொடுத்தார்.

லத்தீன் அமெரிக்காவில் நடந்த கம்யூனிஸப் புரட்சியின் நம்பிக்கைமுகம்; கியூப மண்ணை, முதல் பொதுவுடைமை அரசாக மாற்றிய புரட்சிப் போராளி பிடல் காஸ்ட்ரோ, "வரலாறு என்னை விடுதலை செய்யும்" என்று விடுதலையின் நம்பிக்கைக் குரல் கொடுத்தார்.

சிங்கப்பூரின் முதல் பிரதமர், சிங்கப்பூரின் தந்தை என்று போற்றப்படும் லீ குவான் யூ, "வெற்றிகளுக்குப் பின்னர் ஓய்வா? கூடாது, மரணத்திற்குப் பிறகே ஓய்வு. வெற்றிக்கு அடுத்து மேலும் மேலும் வெற்றிக்காக உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும்" என்று உழைப்பின் வெற்றிக்காகக் குரல் கொடுத்தார்.

அஹிம்சை, சத்யாக்ரஹம் - என்ற இரண்டு ஆயுதங்களை மட்டும் கையில் வைத்துக் கொண்டே, ஆதிக்க வெறியுடன், துப்பாக்கிகளை ஏந்தி குதிரைகளில் வந்த வெள்ளை ஏகாதிபத்தியப் பெரும்படையைத் துரத்திய உத்தமர் காந்தி அடிகள், "கண்ணுக்குக் கண் என்று தொடர்ந்து கொடூரம் காட்டினால், இறுதியில் உலகமே குருடாகிவிடும்" என்று உலக அமைதிக் குரல் கொடுத்தார்.

இவ்வாறு இன்னும் எத்தனையோ குரல்கள் வரலாற்றின் அத்தியாயங்களை நிரப்பி வைத்திருக்கின்றன.

**இங்கே இந்தியத் துணைக் கண்டத்தின் தென் திசையிலிருந்து ஒரு குரல்! ஏகாதிபத்திய - மதவெறி எண்ணம் கொண்டோர் அத்துமீறி, அபகரித்து வைத்திருக்கும் உரிமைகளை மீட்க, ஸ்டாலினின் குரல்! இது எங்கேயோ கேட்ட குரல் அன்றோ?**

**ஆம்; திராவிடப் பேராசான் அண்ணா, வடக்கே டெல்லி வரை சென்று எழுப்பிய குரல்! முத்தமிழறிஞர் கலைஞர் எழுப்பிய குரல்! இப்போதும் அதே குரல்! "தமிழுக்கு மட்டும்தான் இணைக்கும் ஆற்றல் உண்டு.தமிழால் நாம் இணைந்தால் நம்மை யாராலும் மதம், சாதியால், பிரிக்க முடியாது" என்று அனைவரையும் இணைக்கும் தமிழ்க் குரல் !**

**"தமிழ் நமது உணர்வு. திராவிடம் நமது அரசியல் சமூகவியல் உரிமை" என்று நம் உயிரில் கலந்த உரிமைக் குரல்! அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர், முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு இன்று பிறந்தநாள்!**

**திராவிட - தமிழ்ச் சிந்தை கொண்டோர் அனைவரும் அவரை வாழ்க, வாழ்க! என வாயார வாழ்த்துவோம்! அவரது மாபெரும் தமிழ்க் கனவு விரைந்து நனவாக வாழ்த்துவோம்! நம்பிக்கை தரும் குரலரசாம் திராவிட நாயகரை வாழ்த்துவோம் !**